DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, PARAMATHY**

**CC.No. 150/2022**

**PW- 15**

| | | | |
|---|---|---|---|
| Name: | லோகேஷ் (LW-4) | Caste: | |
| Father's/ Husband's Name: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969 ) on the date 14-08-2024

**( Accused absent, petition u/s 317 Cr.P.C is filed and allowed.)**

<u>முதல் விசாரணை=</u>

1.நான் தற்போது புங்கம்பாளையத்தில் குடியிருந்து கோவையில் பீட்டா சிஎன்சி டெக்கனலாஜி கம்பெனியில் CNC ஆப்பரேட்டராக வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி தனபால் என்பவரை தெரியும். கடந்த 23.06.2020 ம் தேதி காலை 7.30 மணியளவில் நான் எங்கள் ஊர்காரர்கள் சுமார் 14 நபர்களுடன் பாண்டமங்கலத்தில் உள்ள வக்கில் தோட்டத்திற்கு நெல்லிக்காய் பறிப்பதற்காக மினி ஆட்டோவில் TN 88 X 9949 என்ற வாகனத்தை தனபால் ஓட்ட அனைவரும் பின்னால் உட்கார்ந்து கொண்டு எங்கள் ஊரிலில் இருந்து சுமார் 500 மீட்டர் தொலைவில் சென்று கொண்டு இருந்த போது ஒரு பெரிய வளைவு வந்தது. அந்த வாகனத்தை தனபால் சுமார் 80 கி.மீ. வேகத்தில் சென்று கொண்டு இருந்தார். அங்கு ஒரு திட்டில் வண்டி ஏறியவுடன் வண்டி கவிழ்ந்துவிட்டது. வாகனத்தில் வந்த அனைவருக்கும் காயம் ஏற்பட்டுவிட்டது. எதிரி சம்பவ இடத்தை விட்டு தனியாக சென்றுவிட்டார். அப்போது எனக் இடது கையில் தோல் பட்டையில் காயம் ஏற்பட்டுவிட்டது. பின்பு அனைவரும் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அதில் சிலபேர் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு

அனுப்பிவைக்கப்பட்டார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்புகுறுக்கு விசாரணை</u>**

1. நான் டிப்பளமோ படித்திருக்கிறேன். வேலூர் அரசு மருத்துவமனைக்கு செல்லும் போது நான்சுயநினைவுடன் தான் இருந்தேன் என்றால் சரிதான். எனக்கு எப்படி விபத்து ஏற்பட்டது என்று மருத்துவர் கேட்டார் நான் சொன்னேன் அதை பதிவு செய்து கொண்டார்கள். மருத்துவரிடம் விபத்தானது புங்கம்பாளையம் காலணி அருகே தான் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நஷ்ட ஈடு கோரி மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான்.

2. போலீசார் விசாரணையில் பெரிய வளைவு வந்தது என்றும் வாகனம் 80 கி.மீ.வேகத்தில் சென்றதது என்றும் வாகனம் திட்டு மேல் ஏறிய விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி விபரத்தை போலீசாரிடம் சொல்லவில்லை என்றும் முதன் முறையாக தற்போது தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து ஆட்டோவின் முன்புற இடது பக்க டயர் பஞ்சர்ஆனதால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் ஆட்டோவில் கிளினராக பணியில் இல்லை என்றால் சரிதான்.

3. சரக்கு ஏற்றும் ஆட்டோவில் உட்கார்ந்து பயணம் செய்யக்கூடாது என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். டயர் பஞ்சர் ஆனாவிபரத்தை ஒப்புக்கொண்டால் விபத்து நஷ்ட ஈடு பெற முடியாது என்பதால் தான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இழப்பீடு வழக்கை பலு சேர்க்க வேண்டி பொய்யான சங்கதிகளை சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/J.Kannan,
Judicial Magistrate,
Paramathy.